05.03.2024

O.S.No.400/2013

பி.வா.சா.1 .திரு.பசும்பொன் முத்துராமலிங்கம்   த.பெ.கருப்பையா

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

குறுக்கு விசாரணை

1. நான் எனக்காகவும், 2ம் பிரதிவாதி சுப்பையாவிற்காகவும் சாட்சியம் அளிக்கின்றேன். தாவா சொத்தில் எனக்கு 38செண்டும், எனது மாமனார் 2ம் பிரதிவாதி சுப்பையாவிற்கு 7-1/2 செண்டும் பாத்தியப்பட்டது. எனக்கு 33 செண்டு 1971ல் கிரையம் மூலமாகவும், 5 செண்டு 1986ல் எனது தாத்தா ஒய்யப்ப கோனார் என்பவரிடம் இருந்து கிரையம் பெற்றும் அதன்படி எனக்கு 38 செண்டு பாத்தியம். மேற்படி சொத்தை பொறுத்து எனதுபெயருக்கு பட்டா மாறவில்லை என்றால் சரிதான். தற்போது அந்த சொத்திற்கு வாதிகள் பெயரில் பட்டா உள்ளது என்றால் சரிதான். 2012ம் ஆண்டு வரை பள்ளிவாசல் பெயரிலும், அதன்பின்பு வாதிகளின் தாயார் பெயரில் பட்டா மாறி வாதிகளின் தாயார் பெயரில் இருந்து, வாதிகளுக்கு தானசெட்டில்மெண்ட் மூலம் சொத்து எழுதி கொடுக்கப்பட்டு தற்போது வாதிகளின் பெயரில் பட்டா உள்ளது. பாண்டியம்மாள் என்பவர் 1ம் வாதி கோபாலகிருஷ்ணனின் தாயார் ஆவார். பாண்டியம்மாளின் தந்தையின் தந்தை பெயர் ஒய்யப்ப கோனார் என்றால் சரிதான்.

2. தாவா சொத்துக்களை 18.01.1948 தேதியிட்ட கிரைய ஆவணம் மூலமாகவும், கிரைய ஆவண எண்.768/1952 என்ற கிரைய ஆவணம் மூலமும் பாண்டியம்மாளின் தந்தையின் தந்தை ஒய்யப்ப கோனார் கிரையம் பெற்றுள்ளார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. அந்த கிரையத்தினை மறைத்து நான் மோசடியாக கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. அந்த சொத்து முழுக்க வக்போர்டு சொத்து அவர்களிடம் இருந்து நான் கிரையம் பெற்றேன். நா்ன தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ-1, 2 மோசடியான கிரைய ஆவணம் என்றாலும, அதை தவிர்த்துள்ள மற்ற ஆவணங்கள்அனைத்தும் நான் தபால் மூலம் வட்டாட்சியர் மற்றும் கோட்டாட்சியருக்கு அனுப்பிய மனுக்களாக காணப்படுகிறது என்றால் சரியல்ல, எனது கிரையம் உண்மையானது. நீதிமன்றத்தில் எனது வழக்கு சார்பாக தாக்கல் செய்ய வேண்டும் என ஆவணங்களை உற்பத்தி செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் மேற்படி மனுக்கள் அனைத்தினையும் அனுப்பி ஆட்களை உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சர்வே எண்.530/7A சொத்தில் வாதிகள் போர் போட்டுள்ளனர் என்றால் எனக்கு தெரியவில்லை, அந்த சொத்து என்னுடையது அல்ல.

3. நான் தாக்கல் செய்துள்ள அனைத்து ஆவணங்களும் எனது எதிர்வழக்குரையில் தாக்கல் செய்யப்படவில்லை என்றாலும், பின்னிட்டு தாக்கல் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. கோபாலகிருஷ்ணன் பொதுநல வழக்கு அதிகமாக தாக்கல் செய்யும் சமூக ஆர்வலர் என்றால் அந்த அடிப்படையில் அவர் ஊரை ஏமாற்றி வருகிறார் என்று சாட்சி கூறுகிறார். நான் திட்டமிட்டு அவருக்கு எதிராக பொய் புகார் அளித்து மேலவளவு காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு பாத்தியப்பட்டதாக சொல்லப்படும் சொத்திற்கு அடங்கல் கணக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், கோரிப்பாளையம் பள்ளி வாசல் பெயருக்கு

அடங்கல் தாக்கல் செய்துள்ளேன். வாதி பெயருக்கு அடங்கல் கணக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து சம்பந்தமாக எனக்கும், வாதிக்கும் முதன்முதலில் எப்போது பிரச்சினை ஏற்பட்டது என்றால் ஞாபகம் இல்லை.

4. நான் எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், அதற்கு முன்பே வாதி தாக்கல் செய்துவிட்டார். வாதி பல ஆக்கிரமிப்புகளை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து அகற்ற உதவியாக இருந்துள்ளார் என்பதாலும், அவர் மீது கொண்ட காழ்ப்புணர்ச்சி காரணமாக பொய்யாக கிரிமினல் வழக்கு தாக்கல் செய்து, இந்த வழக்கிலும் வீண் எதிர்வாதம் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் அனைத்தும் வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றாலும், அதில் எனக்கு எந்தவித உரிமையும் இல்லை என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் இந்த வழக்கிற்காக உற்பத்திசெய்யப்பட்ட பொய்யான ஆவணங்கள் என்றால் சரியல்ல. எனது சொத்தினை பொறுத்து காலியிடமாகத்தான் உள்ளது, வீடு கட்டப்படவில்லை. நான் பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும், தாவா சொத்துக்களுக்கும், எனக்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.